# மருத்துவ முகாமில் மாணவர்கள் ரத்ததானம்

திருவள்ளூர், பிப். 10-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி உத்தரவின்பேரில் மாவட்ட சுகாதார துணை இயக்குனர் பிரபாகரன் மேற்பார்வையில் செங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பாக அதன் தலைமை மருத்துவர் டாக்டர் பா.ஜோஸ்பின் தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் பொதுமக்களுக்கு பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. இதையடுத்து புழல் சூரப்பட்டில் உள்ள வேலம்மாள் பொறியியல் கல்லூரி மாணவ-மாணவிகள் 100-க்கும் மேற்பட்டோர் ரத்ததானம் வழங்கினர். நேற்று மாலை ரத்ததானம் வழங்கிய அனைத்து மாணவ- மாணவிகளுக்கும் அக்கல்லூரியின் முதல்வர் என்.துரைபாண்டி, ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர்கள் கார்த்திக், திலிப் மற்றும் மரு.ஆர்த்தி ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.